[பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரியதொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன, பேரவை மீண்டும் நாளை 23—4—1992 காலை 9.30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

65. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 21—5—1991 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

66. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 8—5—1991 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

67. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1989—90 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்ப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

68. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1990—91ஆம் ஆண்டிற்கான இருப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

69. காவல் கைதிகள் சங்கரும் ஏனைய நால்வரும் 20—8—1990 அன்று இரவு அல்லது 21—8—1990 அன்று அதிகாலையில் தப்பித்துச் சென்றது குறித்து விசாரணை

செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி திரு. மு.மு.இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)

ஆ. அறிக்கைகள். அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

138. கோரிக்கை எண். 31—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

139. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1992-93. (ஆங்கிலம்.)

140. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை. 1991-92.

141. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை. 1991-92.

142. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை. 1991-92.

143. மனுக்கள் குழுவின் ஏழாவது அறிக்கை, 1991—92.

144. மனுக்கள் குழுவின் எட்டாவது அறிக்கை, 1991—92.

TRUTH ALONE TRIUMPHS